பதிவு எண் : எம். 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : புரட்டாசி 30உ (16—10—67) திங்கள் வெளியூர் : புரட்டாசி 31உ (17—10—67) செவ்வாய் [இதழ் : 102

குடிமக்களைக் 'குடிகாரர்' ஆக்குகிறார் பக்தவத்சலம்!

என்மீதுள்ள ஆத்திரத்தை மக்கள்மீது காட்டுவதா?

'நாங்கள் போதையில் இல்லை' என்றுகூறி உதயசூரியனில் முத்திரையிடுவீர்!

தென் சென்னை வாக்காளர்களுக்கு அண்ணா வேண்டுகோள்

சென்னை, அக். 16—

" 'மக்கள், போதையுள்ளவர்கள் ; விவரம் அறியாதவர்கள்' என்று காங்கிரசுக்காரர்கள் நினைக்கிறார்கள் ! 'மக்கள், விவரம் அறிந்தவர்கள் ; எல்லாம் தெரிந்தவர்கள்' என்று நாங்கள் நினைக்கிறோம் !

" 'மக்கள், இழுத்தவன் பக்கத்தில் சென்றுவிடுபவர்கள் ; எந்தப் பக்கத்தில் காற்று அடிக்கிறதோ அங்கு சாய்ந்துவிடுபவர்கள்' என்று நம்பிக்கொண்டிருக்கிற அவர்களின் எண்ணத்தை மாற்றும் தேர்தல், இந்த இடைத்தேர்தல் !

"தமிழகத்தில் காங்கிரசைத் தோற்கடித்தது போதையால்தான் என்பதை ஒப்புக்கு வைத்துக்கொண்டு பார்த்தாலும், கேரளத்தில் காங்கிரசு தோற்றதே—எதனால்? பாபு இராசேந்திர பிரசாத் பிறந்த பீகாரில் காங்கிரசு தோற்றதே—எதனால்? சுபாஷ் சந்திர போசைத் தொட்டிலிட்டு வளர்த்த வங்கத்தில் காங்கிரசுத் தொற்றதே—எதனால்? வெள்ளையனின் ஈட்டி முனைக்கு மார்பு காட்டிய லாலா லஜபதி ராய் தோன்றிய பாஞ்சாலத்தில் காங்கிரசுத் தோற்றதே—எதனால்? காங்கிரசாராலேயே உருவாக்கப்பட்ட அரியானா மாநிலத்தில் காங்கிரசு தோல்வி கண்டதே—எதனால்? 'இந்தியாவின் இதயம்' என்றும், 'பண்டித ஜவகர்லால் நேரு—மோதிலால் நேரு—லால்பகதூர் சாஸ்திரி—இந்திரா காந்தி ஆகியோர் தோன்றிய மாநிலம்' என்றும், முன்பொரு காலத்தில், 'சுயராஜ்யத்தின் திறவுகோல்' என்றும் வர்ணிக்கப்பட்ட உத்தரப் பிரதேசத்திலேயே காங்கிரசு தோல்வி கண்டதே—எதனால் ?

"என்பேரிலுள்ள கோபத்தினால், 'இந்தியாவின் பெரும் பகுதி மக்கள் போதையில் உள்ளவர்கள்' என்று பேசுவது ? அப்படி ஒரு நாட்டில் காங்கிரசாரின் இருபதாண்டுக் கால ஆட்சிக்குப் பின்னர், எல்லோரும் போதை உள்ளவர்களாக—தெளிவில்லாதவர்களாக இருக்கிறார்கள் என்றால், இந்த நாட்டிலேயே காங்கிரசார் இருப்பதற்கு அருகதையற்றவர்கள் என்று பொருள் !

'இப்படி, நாட்டு மக்களை இழிவுபடுத்துகிற எதேச்சாதிகார இயல்பு—அரசியல் ஆணவம் காங்கிரசுக்காரர்களிடம் இன்னும் போகவில்லை என்பதைத்தான் இந்தப் பேச்சு காட்டுகிறது !

"மாபெரும் தேர்தல் நடந்து, அவர்கள் அமர்ந்திருந்த அரசு கட்டிலை உருட்டிவிட்ட பிறகும், அடக்கத்துடன் நடந்துகொள்ளும் பண்பு இன்னும் அவர்களுக்கு வரவில்லை என்பதைத்தான் அவர்கள் பேச்சு காட்டுகிறது !"

என்று அறிஞர் அண்ணா அவர்கள், நேற்று மயிலையில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரை ஆற்றுகையில், தெள்ளத் தெளிவுற விளக்கினார்கள்.

மயிலாப்பூர் தெற்கு மாடவீதியில் நடந்த இக்கூட்டத்திற்குத் தோழர் இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ. தலைமைவகித்தார்.

மயிலை பகுதிச் செயலாளர் எஸ். வி. வேலு, அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி. வேளாண்மை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, பேராசிரியர் க. அன்பழகன் எம்.பி., சட்ட பேரவைத் தலைவர் ஆதித்தனார், உள்ளாட்சி அமைச்சர் முத்துச்சாமி, உணவமைச்சர் கே.ஏ.மதியழகன், செய்தித்துறை அமைச்சர் சத்தியவாணிமுத்து, சுகாதார அமைச்சர் சாதிக் பாட்சா, முரசொலி மாறன், கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் பேசினர்.

கூட்டத்தில் வசூலிக்கப்பட்ட உண்டியல் தொகை ரூ. 227-ம் தேர்தல் நிதி அளிக்கப்பட்டது.

இந்தத் தேர்தல் பிரச்சாரக் கூட்ட மேடையிலேயே தோழர் தேவராசன்—சுசீலா ஆகியோரின் திருமண நிகழ்ச்சி, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

மணமக்கள் சார்பில், ரூ. 5 தென் சென்னைத் தேர்தல் நிதியாகத் தரப்பட்டது.

அறிஞர் அண்ணா அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

பொதுத் தேர்தலின்போது கழகத்திற்கு ஆதரவு தந்த [illegible] கள், மீண்டும் அந்த [illegible] வைத் தருவதன் மூலம் [illegible] கள் மீதுள்ள அன்பை [illegible] நிலைநாட்ட வேண்டும் !

'புதிய அரசை—அதன் [illegible] களை நீங்கள் வரவேற்கிறீர்கள்' என்ற உண்மையை இந்தியா முழுமைக்கும் அறிவிக்க இந்த இடைத் தேர்தல் பயன்பட விருக்கிறது !

இது வெறும் இடைத் தேர்தல் அல்ல—புதிய அரசுக்கு ஆதரவும், துணையும் இருப்பதை வெளிக்காட்டும் தேர்தல் !

இந்த இடைத் தேர்தலில் மாறனை வெற்றி பெறச் செய்வதன் மூலம், 'பொதுத் தேர்தல் முடிவு நியாயமான முடிவு; தேவையான முடிவு' என்பதை நிலைநாட்டுகிறீர்கள் !

'இந்தப் புதிய அரசு நடக்கும் பாதை சரியானது; இப்படி அரசு நடத்துவதைத்தான் விரும்புகிறோம்' என்பதை வெளிப்படுத்தும் தேர்தல் இது !

பக்தவத்சலம் அவர்கள் இப்போதெல்லாம் மாலை நேரக் கூட்டங்களில், விசித்திரமான விளக்கங்களைத் தந்துகொண்டிருக்கிறார் ; 'பொதுத் தேர்தலின்போது 138 தி. மு. கழக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதும், 25 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தி. மு. கழகம் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டதும் ஒரு போதையில்தான் ; ஆனால் இப்போது அந்தப் போதை தெளிந்துவிட்டது ; தி. மு. கழகத்திற்கு மக்கள் ஓட்டுப் போடமாட்டார்கள்' என்று பக்தவத்சலம் கூறியிருக்கிறார் !

அதற்குப் பதில் கூறும் முறையில், 'நாங்கள் முன்பு ஓட்டுப் போட்டது போதையில் அல்ல ; விவரம் அறிந்துதான் போட்டிருக்கிறோம்' என்று கூறுகிற முறையில் மக்கள் இந்த இடைத் தேர்தலில் தி. மு. கழகத்திற்கு வாக்களிக்க வேண்டும்.

'மக்கள், போதையில் வாக்களித்தார்கள்' என்று கூறி மக்களை, 'குடிகாரர்கள்' என்று மறைமுகமாக ஏசியவர்களைக் கண்டிக்கும் முறையில் தி. மு. கழகத்திற்கு ஓட்டளிக்க வேண்டும்.

நவம்பர் 7-ந் தேதியன்று ஓட்டுச் சாவடிக்குச் சென்று உதய சூரியன் சின்னத்தில் முத்திரையிடும்போது, 'நாங்கள் போதையில் இல்லை' என்று கூறி வாக்களிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

நாளை !

தி. மு. க. தலைமைச் செயற்குழு — பொதுக் குழுக் கூட்ட நிகழ்ச்சிகள், தீர்மானங்கள் [illegible] விவரம் [illegible] இதழில் [illegible]

தூதுவர் மனைவி மர்மச் சாவு!

கொழும்பு நகரில் பரபரப்பு

இலங்கையில் பர்மாவின் தூதுவராக இருக்கும் 'பூன்வாட்' என்பவரின் மனைவி திடீரென இறந்ததும், அவரது உடல் உடன் கொளுத்தப்பட்டதும் கொழும்பு நகரில் பெரும் பரபரப்பினைத் தோற்றுவித்துள்ளது !

அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் கொடுத்த புகார்களின் பேரில் அந்தத் தூதுவரகத்துக்கு விரைந்து சென்ற நகரப் போலீசாரை, பர்மியத் தூதுவர் விரட்டியடித்திருக்கிறார் !

சந்தேகத்துக்குள்ளான வகையில் இறந்திருக்கும் திருமதி பூன்வாட், 'நல்ல அழகி' என்று அறிமுகமானவர் ! நாகரிக வட்டாரங்களில் நன்கு தெரிந்தவர் !

தூதுவரகத்தின் வெளிப்புறங்களில் கொழும்பு நகரப் போலீசார் கண்காணித்து வருகின்றனர் !

வாழ்க்கைச் செலவு

செப்டம்பர் 30-ந் தேதியுடன் முடிந்த வாரத்தில், சென்னை நகரில் தொழிலாளர் பிரிவினருக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி நான்கு புள்ளிகள் உயர்ந்து 697-ல் நின்றது.

திருவாளர் சந்தேகம்

'இந்திரா அமைச்சரவையின் பலம் என்ன என்பதை இன்னும் யாராவது தெரிந்துகொள்ளாமல் இருப்பார்களோ' என்று எண்ணிய மொரார்ஜி தேசாய், அகமதாபாத் காங்கிரசுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில், உண்மையை அவிழ்த்து விட்டுவிட்டார்!

முப்பதே முப்பது; ஆமாம்; முப்பது பேர் எண்ணிக்கையில்தான் உயிர் வாழ்ந்துகொண்டிருக்கிறது இந்திரா அமைச்சரவை!

'எப்படிக் கூற முடிந்தது?' என்கிறீர்களா? – மொரார்ஜி சொல்லியிருப்பதை வைத்துத்தான் கூறுகிறேன்.

"30 காங்கிரசு அமைச்சர்களைத் தங்கள் பக்கம் இழுத்துக்கொண்டு—எதிர்க் கட்சிகள் — அதிகாரத்தைக் கைப்பற்றப்பார்க்கின்றன" என்று குற்றஞ்சாட்டியிருக்கிறார் !

வேறு யாராவதாக இருந்தால், 'அப்பாவித்தனமாக இப்படி நிலைமையை வெளிச்சம் போட்டு விட்டாரே' என்று பரிதாபப்படலாம்!

ஆனால் பேசியிருப்பது, மொரார்ஜி தேசாய்! எனவே சந்தேகப்பட வேண்டியிருக்கிறது!

முன்பு, 'சவான், 50 காங்கிரசு உறுப்பினர்களுடன் கட்சி மாறப்போகிறார்' என்று ஒரு செய்தி, உயர் மட்டம் வரையில் பரவி மறைந்தது!

இப்போது தேசாய் வேறு ஒரு வகையில் இந்திரா அமைச்சரவையைப் படம் பிடித்திருக்கிறார்!

சமீப காலமாக இரண்டு தடவை காங்கிரசுச் செயற்குழு நடந்து முடிந்தது. உண்மையில் அமைச்சரவை நீடிப்பதில் அக்கரை உள்ளவரானால் மொரார்ஜி தேசாய், அங்கே இந்த அவலம் பற்றிப் பேசியிருக்கலாம்; தடுப்பதற்கு வழிவகைகளைக் கண்டிருக்கலாம்; அகமதாபாத் கூட்டம்தானா கிடைத்தது?

'அமைச்சரவையின் உயிர் 30-ல் தொங்கிக்கொண்டிருக்கிறது' என்பதனை, தேசாய், கட்சிக் கவலையில் கூறியிருப்பதாகத் தெரியவில்லை! இந்திராவுக்கு விடுத்துள்ள ஒரு 'அபாய அறிவிப்பா'கத்தான் தெரிவித்திருக்கிறார்.

"அப்பாவைத்தானே தேடிக்கொண்டு வந்திருக்கிறீர்கள்? அவர் குதிருக்குள் இல்லை" என்ற பிள்ளையைப் போலப் பேசியிருக்கிறார், தேசாய்!

வெளியேறப் போவதாகக் கூறப்பட்டிருக்கும் 30 காங்கிரசு உறுப்பினர்கள்கூட, ஒரு தலைவலி அல்ல இந்திராவுக்கு!

அதை இப்படி வெளியே கூறி அம்பலப்படுத்துகிறாரல்லவா தேசாய்—இவர் மிகவும் கவனிக்கப்பட வேண்டியவர்!

உண்மைப் பகைவர்களைக் காட்டிலும் நண்பர்களைப் போல் உள்ள பகைவர்கள்தான் ஆபத்தானவர்கள்!

உதவி கேட்கப்போன இடங்களில் தேசாய் தெரிவித்திருந்த கருத்துக்களையும்—இந்த அகமதாபாத் செய்தியையும் சேர்த்துப் பார்ப்பவர்களுக்கு உண்மை நிலை—உள் நிலை இரண்டும் தெரியும்!

—எஸ். ஆர்.

நம்நாடு

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. [illegible]

திருவள்ளுவராண்டு 1998 புரட்டாசி 30 (16—10—67) திங்கள்

கழக ஆட்சியும் காங்கிரசும்!

மற்ற மாநிலங்களைப் போலல்லாமல், தமிழகத்தில் நிர்வாகம் செம்மையாக நடைபெற்று வருகிறது; இதற்குக் காரணம், 'முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பதும், அந்த ஆட்சிக்குத் தலைமைப் பொறுப்பாளராக அண்ணா அவர்கள் இருந்துவருவதும்தான்' என்பதை மற்ற அரசியல் கட்சியினரும் ஒப்புக்கொள்ளுகின்றனர்.

தமிழக ஆட்சிப் பொறுப்பை கழகம் ஏற்றுக்கொண்டு குறுகிய காலமே ஆனபோதிலும், இக்குறுகிய காலத்துக்குள்ளாகவே கழக ஆட்சிக்குக் கிடைத்துவருகின்ற பாராட்டையும், தரப்படுகின்ற நற்சான்றுகளையும் இங்குள்ள காங்கிரசுக் கட்சியினரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை; 'இல்லாததையும் பொல்லாததையும் கூறி, கழக ஆட்சிக்கு எதிராக மக்களைக் கிளப்பிவிட வேண்டும்' எனக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கின்ற தமிழகக் காங்கிரசுக் கட்சியினர், அதற்கான வாய்ப்பைப் பெற முடியாமல் ஏமாற்றமும் எரிச்சலும் அடைந்திருக்கின்றனர்!

சீரணியைக் காட்டி, தமிழக அரசுக்கு எதிராக மக்களைத் தூண்டிவிடக் காங்கிரசுத் தலைவர்கள் முயன்றனர். இதற்குள்ளாகச் சீரணி ஆற்றியுள்ள பணி, அவர்கள் முயற்சிக்குத் தோல்வியைக் கொடுத்துவிட்டது!

'கல்லூரி மட்டத்தில் அனைவருக்கும் இலவசக் கல்வி' எனக் குரல் கொடுத்து, கழக ஆட்சியிடத்தில் மக்களுக்கு அதிருப்தி ஏற்படுத்தக் காங்கிரசுத் தலைவர்கள் முயன்றனர். இத்துறையிலும் முதலமைச்சர் செயல்படுத்தியுள்ள ஏற்பாடு, அவர்களுடைய ஆசையில் மண்விழச் செய்துவிட்டது!

அரசு ஊழியர்களுக்குக் கிராக்கிப் படியை உயர்த்துவதில் தமிழக அரசு காட்டிய தாமதத்தைச் சுட்டிக்காட்டி—கழக ஆட்சி ஏய்த்துவிட்டதாகக் கூறி—கழக ஆட்சியின் மீது அரசு ஊழியர்களின் ஆத்திரத்தையும் அதிருப்தியையும் கிளப்பிவிட, முன்னாள் முதலமைச்சர் போன்ற காங்கிரசு முதியவர்கள் முனைந்தனர். இவர்கள் கெடுமதியைத் தெளிவாகத் தெரிந்துகொண்ட அரசு ஊழியர்கள், இந்த முதியவர்கள் சொல்லை நம்பவுமில்லை—ஏற்கவுமில்லை; மாறாக, துச்சமாக மதித்தனர்!

இந்தத் துறையிலும், காங்கிரசுக் கட்சியினர் பெரும் ஏமாற்றத்தை அடைந்தனர்! காங்கிரசுக் கட்சியினர் வாயடைத்து வெட்கித் தலைகுனியத்தக்க விதத்தில், காங்கிரசுக் கட்சியினர் ஆட்சிப் பொறுப்பில் இருந்த நேரத்தில் கொடுத்துவந்திருப்பதைவிடக் கூடுதலான அளவுக்கு—அரசு ஊழியர்கள் எவரும் எதிர்பாராத நிலையிலேயே—தமிழக அரசு, கிராக்கிப் படியை உயர்த்திவிட்டிருக்கிறது!

கிராக்கிப் படியை உயர்த்தியிருப்பதுடன், முதன் முதலாக நகர ஈட்டுப் படியையும் அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கத் தமிழக அரசு துணிந்துவிட்டது. இதற்காக அரசு ஊழியர்கள், பொதுவாக இன்றையத் தமிழக அரசையும் குறிப்பாக முதலமைச்சர் அண்ணா அவர்களையும் இதயபூர்வமாக மகிழ்ந்து வாழ்த்தவும் செய்கின்றனர்—வெளிப்படையாகப் பாராட்டவும் செய்கின்றனர்.

தங்களுக்கு அளித்திருக்கின்ற சம்பளச் சலுகையைக் கண்டு அரசு ஊழியர்கள் ஒவ்வொருவரும் களிப்படைந்திருக்கின்றனர். இந்தச் சலுகையைச் செய்வதில் சிறிதளவு காலந் தாழ்த்தியதைப் பெரிதுபடுத்தி அரசு ஊழியர்களுக்குத் தூபமிட்டுவந்த காங்கிரசுத் தலைவர்கள்—அரசு ஊழியர்களுக்குத் தாங்கள் காட்டிய பரிவு உண்மையானதாக இருக்கும்பட்சத்தில்—அரசு ஊழியர்கள் ஊதிய உயர்வு பெற்றமைக்கு, அரசு ஊழியர்கள் அடைந்த மகிழ்ச்சியை அல்லவா அடைந்திருக்க வேண்டும்? ஆனால் காங்கிரசுத் தலைவர்களுக்கோ, மகிழ்ச்சி இல்லை!

மகிழ்ச்சி எப்படி ஏற்படும்? அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு தரவில்லை என்பதைப் பற்றிக்கொண்டு, 'அரசின்மீது அதிருப்தியை மூட்டிவிட வேண்டும்' என்ற நச்சு நினைப்பில் அல்லவா, அரசு ஊழியர்களுக்காகக் காங்கிரசுத் தலைவர்கள் முதலைக் கண்ணீர் வடிக்கத் துணிந்தனர்? அரசியல் காரணங்களுக்காக, குறிப்பிட்ட ஒரு பிரச்சினையைக் கிளப்பிவிட முனைகின்ற காங்கிரசுத் தலைவர்கள், குறிப்பிட்ட பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படுவதை விரும்பவேமாட்டார்கள் என்கிறபொழுது, மகிழ்ச்சி கொள்ளுவது எவ்வாறு இயலும்?

தமிழக ஆட்சிப் பொறுப்பு கழகத்திடம் இருக்கின்றவரையில், ஏதாவது உப்புச்சப்பற்ற காரணங்களைக் காட்டி, கழக ஆட்சிக்கு எதிராக மக்களைத் தூண்டிவருவதில்தான் காங்கிரசுக் கட்சியினர் தீவிரமாக ஈடுபாடு கொண்டிருப்பர். தங்களைத் தவிர, கழகம் உட்பட மற்ற அரசியல் கட்சிகள் ஆட்சிப் பொறுப்பில் இருப்பதை, காங்கிரசுக் கட்சியினரால் தாங்கிக்கொள்ளவே முடியாது!

தாங்கள்தான் அரசியல் விடுதலையை இந்த நாட்டுக்குத் தேடித் தந்தவர்கள்—அதன் விளைவாக, இந்த நாட்டை ஆளக்கூடிய வலிமையும தகுதியும் தங்களுக்கு மட்டும்தான் உண்டு—என்ற 'அரசியல் மாயை'க்குத் தங்களை அடிமையாக்கிக் கொண்டிருப்பவர்கள் காங்கிரசுக் கட்சியினர்! இப்படி ஒரு தவறான கருத்துக்கு அடிமைகளாகிவிட்டிருக்கின்ற காங்கிரசுக் கட்சியினர், சாதாரண எதிர்க் கட்சியாகக்கூடச் செயல்பட முடியாது என்ற நிலையில், 'சிறந்த எதிர்க் கட்சியாகச் செயல்படுவர்' என எதிர்பார்ப்பது, பேதமையாகும்!

—இரா. செ.

"லலித கலா அகாடமியில் பிரமிக்கத்தக்க அளவுக்கு இலஞ்சம் மலிந்திருப்பதன் காரணமாக, அதன் தலைவர் டாக்டர் முல்க் ராஜ் ஆனந்த், பதவி துறக்கப்போவதாகக் கூறியுள்ளார்."

—'இந்தியன் எக்ஸ்பிரஸ்'

"'காங்கிரசில் இருக்கப் பிடிக்கவில்லை; ஆனால், வேறெந்தக் கட்சிக்குப் போவதென்றும் தெரியவில்லை' என்று முன்னாள் மத்திய அமைச்சர் கே. டி. மாளவியா கூறியிருக்கிறார்.

—'டைம்ஸ் ஆப் இந்தியா'

உண்மைக்கதை

ஊதியம்பெற முடியாத துணை அமைச்சர்

மனுக்கள் போடுகிறார்—பலன் இல்லை!

கடந்த ஏப்ரல்மாதத்தில் பதவி ஏற்றதுமுதல் இதுவரை ஊதியமே பெற முடியாத நிலையில் இருக்கிறார்—கோவா துணை முதலமைச்சர்!

பண்டோட்கார் அமைச்சரவை வந்தபோதுதான், துணை முதலமைச்சர் பதவி கோவாவில் முதன்முதலாக உருவாக்கப்பட்டது.

மத்திய ஆட்சிப் பகுதிச் சட்டத்தில், துணை முதலமைச்சர் பதவியைப் பற்றியோ, ஊதியத்தைப் பற்றியோ ஏதும் குறிப்பிடப்படவில்லை!

இது குறித்து நீண்ட காலமாக அந்தத் துணை அமைச்சர், மத்திய அரசுடன் கடித மூலம் தொடர்பு கொண்டு வந்தும் இதுவரையில் ஏதும் பலன் இல்லை!

★

"45 ஆண்டுகள் தொடர்ந்து மீன் வியாபாரம் செய்த ஜப்பானியர் ஒருவர், திடீரென அதை நிறுத்திக்கொண்டு, வாசனைத் திரவியக் கடை வைத்திருக்கிறார்; அதற்கு அவர் கூறும் காரணம், 'மீன் நாற்றம் உடலுக்கு ஒத்துக்கொள்ளவில்லை' என்பது தான்!"

—'லிங்க்'

★

"இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் போலி ரேஷன் கார்டுகள் மூலம் உணவுப் பொருட்கள் வாங்கிக்கொண்டு வந்திருக்கின்றனர்! மூன்றாவதாக இன்னொரு உறுப்பினர் பொய் சொல்லி தன் பெயரில் மேலும் ஒரு ரேஷன் கார்டைப் பெற்றிருக்கிறார்!"

—'இந்தியன் எக்ஸ்பிரஸ்'

★

"உத்தரப் பிரதேச சுகாதார அமைச்சர் பிரதாப் சிங், நாட்டிலுள்ள திருமணமானவர்களுக்கு ஒரு யோசனை வழங்கியிருக்கிறார்—

"ஒவ்வொரு தம்பதிகளும் மூன்று குழந்தைகளை மட்டும் பெற்றுக்கொள்ள வேண்டும்!

"முதல் திறமைசாலியான குழந்தையை டாக்டராக்க வேண்டும்!

"அடுத்த திறமைசாலியான குழந்தையை எஞ்சினியராக்க வேண்டும்!

"மூன்றாவதான — திறமை குறைந்த குழந்தையை, அமைச்சராக்க வேண்டும்!"

—'பயனீர்'

★

"திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரியில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு படித்த மாணவர் ஒருவர், நடுவில் தமது எண்ணத்தை மாற்றிக்கொண்டு ஆங்கிலத்[illegible] பயிற்றுமொழியாகக் [illegible]ப்பில் சேர்ந்து[illegible] காரணம், [illegible] தால்தான் பெண் கொடுக்கப்படும்' என்று நிபந்தனை விதிக்கப்பட்டதுதான்!"

—'இந்தியன் எக்ஸ்பிரஸ்'

★

"'வியட்நாம் யுத்தமோ — கொரியப் போரோ—இரண்டாவது உலகப் பெரும சண்டையோ கொன்ற மனிதர்களைக் காட்டிலும், சிகரெட், உலகின் மிக அதிக அளவு உயிரைக் குடிக்கிறது!" இதைக் கூறியிருப்பவர், காலஞ்சென்ற கென்னடியின் சகோதரர் இராபர்ட் கென்னடி."

—'டெக்கான் ஹெரால்டு'

விலைவாசி குறைய செய்யவேண்டியது என்ன?

விவசாயிகளிடை அண்ணா விளக்கம்

"விலைவாசிகள் குறையாத வரையில், வேறு எந்தச் சீர்திருத்தம் செய்தாலும் அது நிலைக்காது! இதையெல்லாம் கருதியே, 'கொள்முதல் நெல்லுக்குப் போன ஆண்டு கொடுத்ததைக் காட்டிலும் அதிகமாக இந்த ஆண்டு கொடுக்கவேண்டாம்' என்ற தீர்மானத்துக்கு வந்தோம்; பரந்த—பொருள் மிகுந்த இந்த நோக்கத்தை அருள்கூர்ந்து உணரும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆதாயம் இல்லை என்பதுண்டா?

"வேளாண்மைச் செலவுகளைப் பற்றி இங்கு கூறப்பட்டது. இந்த ஆண்டு செலவு சென்ற ஆண்டு ஆன செலவைவிட எந்த அளவுக்கு எதனால் அதிகரித்துள்ளது என்று பார்க்கவேண்டும்.

"உர விலை உயர்ந்ததால் செலவு கூடியுள்ளதென்பது உண்மையே. இதர எல்லா அம்சங்களிலும் சென்ற ஆண்டு இருந்தது போலவே இவ்வாண்டும் உள்ளது; வேளாண்மைச் செலவையும் புதிய ரக நெல் விளைச்சலால் ஏற்பட்டுள்ள நல்ல பலனையும் ஒப்புநோக்கிச் சொல்லுங்கள்—10 மூட்டை விளைந்த நிலத்தில் இப்போது 30 மூட்டை விளைகிறதல்லவா? எனவே, வரவேண்டிய ஆதாயம் வருகிறதா இல்லையா? ஆதாயத்தில் வேண்டுமானால் துண்டு விழலாம்; 'ஆதாயமே இல்லை' என்று உங்களில் யாரும் சொல்லமாட்டீர்கள்!

நோட்டடித்தால் போதாது!

"கடந்த ஒரு வாரத்தி[illegible]திய அரசு, 90 கோடி ரூபாய்க்கு நோட்டுகள் அச்சிட்டி[illegible]க்கிறது! நான் நீண்டகாலமாகவே சொல்லி வருகிறேன்—[illegible]ாட்டு வாட்டம் போக்கிட நோட்டடித்தால் போதாது' என்[illegible]!

"பணம் வட்டவடிவமானது; உருண்டோடி கீழே விழுகிறவரை ஓடிக்கொண்டே [illegible]ருக்கும்! காகிதத்தாலான நோட்டும் தாங்காது—பறந்துகொண்டே இருக்கும்! எங்கேனும் ஓர் இடத்தில் இதைத் தடுத்து நிறுத்திட வேண்டும்."

படி அரிசியின்றி ஆள முடியாது!

"படி அரிசித் திட்டம் என்பது எங்களோடு போய்விடாது! யார் இனி ஆட்சிக்கு வந்தாலும், அந்த அளவு போடாவிட்டால் அவர்கள் தலை தப்பாது!

"நெல்லின் விலை அதிகரித்தால் படி அரிசித் திட்டத்துக்கு ஆகின்ற செலவு மேலும் அதிகரிக்கும்!

"இப்போது அரசாங்கம், ரூ. 8 கோடி அளவுக்கு கிராக்கிப் படி உயர்வு அளித்துள்ளது; இப்படி அதிகரித்துக்கொண்டே போவதால் நாட்டில் பணவீக்கம்தான் அதிகரிக்கும்! அப்படி மக்கள் கைக்கு வரும் பணமும் தங்காது!

"ஆகையினால், 'விலைவாசிகள் இறக்கப்படுவதொன்றே உண்மையான வாழ்க்கைத்தர உயர்வுக்கு வழிகோலும்' என்பதை உணர்ந்து, அரசு எடுக்கும் நற்காரியங்களுக்கு ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நலிந்த பகுதியினருக்காகவே!

"தான் கொள்முதல் செய்யும் அரிசியை கேரளத்துக்கும் மேற்கு வங்கத்துக்கும், மகாராட்டிரத்துக்கும் இலாபத்துக்கு ஆந்திரம் விற்கிறது! நாம் அப்படி வெளியில் விற்பதில்லை!

"நம்முடைய மக்களில் நலிந்த பகுதியினரது தேவை கருதி, அவர்களுக்கு விநியோகிக்கவே தமிழக அரசு கொள்முதல் செய்கிறது; அதிலும் நூற்றுக்கு இருபது பங்கு நெல்லை மட்டுமே கொள்முதல் செய்கிறது; மீதமுள்ள எண்பது சதவிகிதம் உற்பத்தியாளர்களிடமும், அவர்களிடமிருந்து வாங்கிடும் வணிகர்களிடமும் விடப்படுகின்றது; 'அவை, இன்ன விலைக்குத்தான் விற்கப்பட வேண்டும்' என்று கட்டாயமில்லை!

நட்டம் எப்படி ஏற்படுகிறது?

"ரூபாய்க்குப் படி அரிசி என்று திட்டம் போட்டு அதன்படி போடுவதில், இப்போது நெல்லுக்குக் கொடுக்கும் விலையினால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 8 கோடி செலவாகுமென்று கணிக்கப்பட்டுள்ளது. மேலும், குறுவை நெல்—நடுத்தர நெல் என்று நிர்ணயிக்கப்படாமல், சட்டத்தில் இந்த நெல்லை, '[illegible]ல்தர நெல்' என்று சொல்லி எழுதி வைத்திருக்கிறார்கள்; [illegible]ல் அதிக [illegible]லை கொடுக்க நேரிடுகிறது. இப்படி அதிக[illegible] கொடுப்பதால் நட்டம் ரூ. 17 கோடிவரை வளருமோ [illegible] ஒரு அச்சமும் உள்ளது."

உ[illegible]வர்களுக்கு ஒரு திட்டம்

"தரிசு நிலங்களை அரசாங்கம் தன் செலவில் பயன்படுத்தி, பிறகு அந்நிலங்களை நிலமற்ற விவசாயிகளுக்கு 10, 15 ஆண்டுக் குத்தகையில் விடும். அந்நிலத்தைப் பண்படுத்திட ஆன செலவை ஒவ்வோர் அறுவடையின் போதும் சிறிது சிறிதாக அரசுக்கு அந்த விவசாயி செலுத்தி வரவேண்டும்; முழுத் தொகையும் செலுத்தியான பிறகு, அந்நிலத்தை விவசாயிக்கே சொந்தமாக்கிவிடும். இவ்வாறு ஒரு திட்டமிட்டுச் செயலாற்ற இருக்கிறது தமிழக அரசு!

"புதுக்கோட்டை அருகே குடுமியான் மலைப் பகுதியில் சீரணியினரால் பயிரிடத்தக்க நிலமாக மீட்கப்பட்டுவரும் நிலத்தில்

(இதன் தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

கிடைக்கும் உதவியையும் பயன்படுத்திக்கொள்ள வக்கில்லை!

இந்தியாவின் மந்தநிலை—இரஷ்யாவின் அதிருப்தி

புதுடில்லி, அக். 14—

இரஷ்ய உதவியைக் கொண்ட தொழில் திட்டங்களை நிர்வகிக்கப்படுவது பற்றி இந்திய அரசாங்கத்திடம் இரஷ்ய அதிகாரிகள் அதிருப்தி தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக இங்கு தொழிற்சாலைகளுக்கான இயந்திரச் சாதனங்களைத் தயாரிப்பதற்காக அமைக்கப்பட்ட ராஞ்சி கனரகத் தொழிற்சாலைத் தொகுப்புக் குறித்து அவர்கள் எரிச்சல் கொண்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

ராஞ்சித் தொழிற்சாலை தனது உற்பத்தி வசதியை முழு அளவில் பயன்படுத்தவில்லை. ஆர்டர் புத்தகங்கள் காலியாக இருப்பதால் உற்பத்தி குறைந்துவிட்டது. ஆர்டர்கள் இல்லாமை இங்கு தொழிற்சாலை இயந்திரச் சாதனங்களுக்குக் கிராக்கி இல்லை என்பதைக் காட்டுகிறது.

பொருளாதார நடவடிக்கைகளில் உள்ள மந்தமே அதற்குக் காரணமாகும்; 'நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடையும்' என்று உறுதியாகத் தெரிந்தால்தான் அரசாங்க இலாகாக்களும், தொழிலதிபர்களும் இயந்திரச் சாதனங்களுக்கு ஆர்டர் அளிக்க முன்வரக்கூடும்.

'புதிய உருக்காலைகளை அமைக்க உருக்குத் துறை தற்போதைக்கு விரும்பவில்லை' என்பதும் ராஞ்சித் தொழிற்சாலையில் வேலை மந்தமடைந்திருப்பதற்கான மற்றொரு காரணமாகும்.

பொகாரோ உருக்காலைக் கட்டுமான வேலை மெதுவாக நடப்பது குறித்தும் இரஷ்யர்கள் கவலை கொண்டுள்ளனர். ரூபாய் நிதி வசதி இல்லாத காரணத்தால், உருக்கு இலாகா, பொகாரோ விஷயத்தில் தளர்நடை போடுகிறது! இது, அந்த ஆலைக்கான இயந்திரச் சாதனங்களைத் தயாரித்தளிப்பதில் இரஷ்யாவின் அலுவல் திட்டத்தைப் பாதிக்க ஆரம்பித்துள்ளது.

இரஷ்யாவின் முந்தைய உதவியைப் பயன்படுத்துவதில் உள்ள தாமதம், இந்தியாவுக்கு அந்நாட்டிடமிருந்து மேற்கொண்டு உதவி கிடைப்பதைப் பாதிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இரஷ்ய உதவியில் பயன்படுத்தப்படாமல் எஞ்சி நிற்கும் தொகை சரியாகப் பயன்படுத்தப்படும்வரை அது மேற்கொண்டு உதவி வராமல் தடுத்துவிடலாம்! "...யா புதிய உதவியைக் கே... முன்னர், பழைய உத... நன்கு பயன்படுத்திக் கொ...வண்டும்'' என்பது இரஷ்ய...ன் கருத்து எனத் தெரிகிறது.

ஐம்பெருங் காப்பிய மாநாடு— பெங்களூரில் நடத்த ஏற்பாடு

சென்னையில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, கருநாடகத்தில், ஐம்பெருங் காப்பிய மாநாடு நடைபெறவிருக்கிறது.

நவம்பர் திங்கள் இறுதியில் நடைபெறவிருக்கும் இம்மாநாட்டில், தமிழ்ப் பேரறிஞர்கள்—கவிஞர்கள்—கலைஞர்கள் பலரும் பங்கேற்கவிருக்கிறார்கள்.

கருத்தரங்கம், கவியரங்கம். இசையரங்கங்களும் நடைபெறவிருக்கின்றன.

இம்மாநாட்டையொட்டி ஐம்பெருங் காப்பிய ஆய்வுக் கட்டுரை—கவிதை—பாடல் போட்டிகளும் நடைபெறும்; இப்போட்டிகளில் பொதுமக்களும், மாணவ—மாணவியரும் கலந்து கொள்ளலாம். அக். 25-ஆம் நாளுக்குள் போட்டிக்கான எழுத்தோவியங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

முகவரி:— செயலாளர், ஐம்பெருங் காப்பிய மாநாடு 40, ஆர்ம்ஸ்ட்ராங் ரோடு, பெங்களூர்-1.

குலுக்குச் சீட்டு முறை

தமிழக அரசின் திட்டம்

சென்னை, அக். 14—

அரசின் கருவூலத்திற்காகப் பணந் திரட்டத் திட்டமிட்டிருக்கும் குலுக்குச் சீட்டுகளை எவ்வாறு நடத்துவது என்று அமைச்சரவை அடுத்த வாரம் முக்கியமான முடிவை எடுக்கும். ஆய்வுக் குழு ஒன்று இது தொடர்பாக ஏற்கனவே பம்பாய்க்குச் சென்றிருக்கிறது; அது, 'குலுக்குச் சீட்டு முறை எவ்வாறு செயல்படுகிறது' என்பதை நன்கறிந்து கொள்வதற்காகப் பின்னர் மேற்கு வங்காளம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கும் செல்லும்.

குலுக்குச் சீட்டு 1968 சனவரி வாக்கில் முழு உருப்பெறலாம் என்று நம்பகமாகத் தெரிகிறது; தமிழக அரசு அதை மூன்று மாதத்திற்கு ஒரு முறை நடத்தலாம்; ஏழைகளும், வசதிபடைத்தவர்களும் இதில் விரும்பிக் கலந்து கொள்வதற்கு வசதியாக ஒரு சீட்டின் விலை ரூ. 1; ரூ. 10 என்று இருக்கும்.

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

முதல் ஆயிரம் ஏக்கரில், குத்தகைத் திட்டத்தின்கீழ் விவசாயிகளைக் குடியேற்றலாமா என்றும் அரசு யோசித்து வருகிறது.

"பாடுபடுகிற உழவர்களுக்கு நிலம் சொந்தமானால், அவர்கள் நிமிர்ந்து நடப்பார்கள்! அவர்களுடைய நெஞ்சத்தில் மகிழ்ச்சி ஏற்படும்! எனவே, பண்படுத்திய பின் ஒப்படைக்கும் இத்திட்டத்தை வகுத்துச் செயலாற்றவிருக்கிறோம்!

அறுவடை செய்யப் பட்டதாரிகள்!

"இன்னும் 10, 15 ஆண்டுகளில் பி. ஏ. பட்டதாரி டிர... ஓட்டுவதையும், எம்.ஏ. பட்டதாரி அறுவடை செய்வ... பார்க்கலாம்! 'நான் உழைக்கிறேன்; அதிலிருந்து பயன் ...கிறேன்' என்று சொல்லத்தக்க விதத்தில், படித்த பட்டதாரிகளும் உழைப்பார்கள்!

"படித்தவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டால், கிடைக்கின்ற பலன் மிக அதிகமாக இருக்கும்!

"படிப்பறியாத விவசாயி உரம் கேட்டால், அதிகாரிகளிடமிருந்து வருகின்ற பதில் வேறாக இருக்கும்! அதையே ஒரு பி.ஏ. பட்டதாரி கேட்டால், கேட்கும் குரல் மட்டுமல்ல— கிடைக்கும் பலனும் வேறாக இருக்கும்!

"படித்தவன் உழவேண்டும்—உழுபவன் படிக்கவேண்டும்; 'படிப்பவன் அறிவுப் பசியைத் தீர்க்க—உழுபவன் உற்பத்தியைப் பெருக்க' என்ற நிலை ஏற்பட வேண்டும்!''

—செங்கற்பட்டு மாவட்ட விவசாயிகள் கருத்தரங்கில்

ஒன்றை இரண்டாக்கினர்— இரண்டை ஒன்றாக்கினர்!

மொரார்ஜி தேசாயின் வெளிநாட்டுப் பயணம் பற்றி முன்பே ஒரு முறை விளக்கியாகி விட்டது. இப்போது மேலும் ஒரு செய்தி வந்திருக்கிறது.

போன இடங்களிலெல்லாம், பிரச்சினைகளைப் புதிதாக்கிவிட்டு வந்திருக்கிறார் தேசாய்! அதாவது, 'அடுப்பங்கரை பாஷை'யில் சொல்வதென்றால், தோசையைத் திருப்பிப் போட்டுவிட்டு வந்திருக்கிறார்!

வடக்கு வியட்நாம் — சிக்கிம் — பிரிட்டன்-ஐரோப்பியப் பொதுச் சந்தை—இப்படி எல்லாக் கொள்கைகளிலும், 'ஏட்டிக்குப் போட்டி' என்ற போக்கில் அவர் கருத்துக்களைச் சொல்லி வந்திருப்பதாகக் காங்கிரசு வட்டாரமே கூறிவருகிறது!

அமெரிக்காவில் அவர், சீனா பற்றிப் பேசி வந்திருப்பதுதான், ஏற்கனவே புதுடில்லியில் புழுதிப் படலத்தை ஏற்படுத்தியிருக்கிறது!

குழாயடிச் சண்டைபோல், துணைத் தலைமையமைச்சரான அவர், இந்திராவின் பொறுப்பில் இருக்கும் வெளிவிவகாரஇலாகாவுடன், 'சொற்போர்' ஒன்றே தொடுத்துவிட்டார்!

இன்னும் அவர் ஜெர்மனியில் பேசியிருக்கும் விஷயங்களும் தெரியவேண்டிய அளவுக்கு வெளியாகிவிட்டால், பிரச்சினை எங்குபோய் முடியுமோ தெரியவில்லை!

'ஜெர்மனி, இரண்டு' என்பது உலகம் அறிந்த உண்மையோ இல்லையோ—இந்தியா அரசியல் ரீதியில் ஒப்புக்கொண்ட கருத்தாகும்.

'இரண்டு ஜெர்மனிகள் என்பது வாழ்வின் ஓர் உண்மை' என்று இந்தியாவின் முதல் தலைமையமைச்சர் நேரு கூறியிருக்கிறார்!

இந்தியாவின் இரண்டாவது தலைமையமைச்சர் லால்பகதூர் சாஸ்திரியும், இந்த நிலையை மாற்றியதாகவோ மறுத்ததாகவோ ஆதாரம் இல்லை!

இப்போது தலைமையமைச்சராக இருக்கும் இந்திராவும் அப்படியே! அது மட்டுமல்ல; 1966ம் ஆண்டில் மாஸ்கோ ஒப்பந்தம் ஒன்றில், இரண்டு ஜெர்மனிகளுக்கும் உள்ள எல்லைகளை பற்றி வலியுறுத்திக் கையெழுத்திட்டிருக்கிறார், இந்திரா காந்தி!

ஆனால், உதவி கேட்க மேற்கு ஜெர்மனிக்குப் போன இந்தியாவின் முதல் துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய், மேற்கண்ட எல்லா நிலைகளையும் தகர்த்தெறிந்திருக்கிறார்!

கிழக்கு ஜெர்மனியின் வர்த்தகத் தூதுவர், காங்கிரசுத் தலைவர் காமராசர் வரை வந்து சந்திக்கிறார்!

ஆனால் மேற்கு ஜெர்மனியில் மொரார்ஜி தேசாய் கூறு

உள்ளும் புறமும்

கிறார்—''கிழக்கு ஜெர்மனியில் இருக்கும் இந்தியாவின் வர்த்தகத் தூதுவரகம் அதிகார முறைப்படி அமைந்ததல்ல; சும்மா பெருக்காக வைத்த ஒன்று'' என்று!

அதுமட்டுமல்ல; ஜெர்மனிகள் பற்றி இந்தியா ஒப்புக்கொண்டிருக்கும் சோவியத் எல்லையை, 'காலம் கடந்தது'—'நேரத்துக்குப் பொருத்தமில்லாதது' என்று, பேட்டியொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல் இன்னுமொன்று; தனது பேச்சு, பேட்டி ஆகிய எல்லா நிகழ்ச்சிகளிலும் மொரார்ஜி தேசாய், 'ஜெர்மனி' என்று பொதுப்படையாகக் குறிப்பிட்டிருக்கிறாரே தவிர, 'மேற்கு ஜெர்மனி' என்றோ, 'பான்' (Bonn) அரசு என்றோ ஒரு இடத்தில்கூடக் குறிப்பிடவில்லை!

இது, பார்வையாளர்கள் மத்தியில், பயங்கரமான யூகங்களுக்கு—சந்தேகங்களுக்கு வழி வகுத்திருக்கிறது!

'மேற்கு ஜெர்மனி' என்று கூறுவதே, 'கிழக்கு ஜெர்மனி' என ஒன்று இருப்பதை ஒப்புக்கொள்ளுவதாகும்!

இதைத் தவிர்ப்பதற்காகவே, தேசாய், மேற்கு ஜெர்மனியைப் பற்றிக் குறிப்பிட நேரிட்டபோதெல்லாம், 'பரந்த பொருளி'ல் 'ஜெர்மனி' என்றே கூறியிருக்கிறார் எனக் கூறப்படுகிறது!

மொரார்ஜியைப் பொறுத்தவரையில், அவரது பேச்சுக்களைப் பற்றி முடிவு செய்ய இப்படியெல்லாம் சல்லடை போட்டு சலிக்கவேண்டியதில்லை; அல்லது, பூதக் கண்ணாடி போட்டு, 'தெரிகிறதா' என்றும் பார்க்க வேண்டியதில்லை!

'துணிவுக்காரர்; எனவே, திட்டமிட்டேதான் இவ்வாறு பேசியிருப்பார்'' என்று நாமும் திடமாக நம்பலாம்!

தேசாயின் தேசாந்திரத்தில், 'சீனா' அடுத்தபடி புரளிகளைக் கிளப்பும் பிரச்சினை, 'ஜெர்மனி'தான் என்பதில் சந்தேகமில்லை!

ஆனால், இரண்டிலும் ஓர் அடிப்படை வேறுபாடு!

சீனா விஷயத்தில், 'ஒன்றாக இருந்ததை, 'இரண்டாக' மாற்றினார்!

ஜெர்மனி பிரச்சினையிலோ, 'இரண்டாக' இருப்பதை ஒன்றாக மாற்றியிருக்கிறார்!

இது, 'தள்ளி ஒதுக்கிவிடும் சாதாரணமான விஷயமன்று' என்பது, போகப் போகத்தான் தெரியப்போகிறது!

—எஸ். ஆர்.

நாட்டின் வாழ்வுக்கு வங்கம் ஆற்றிய பங்கு

சென்னைவாழ் வங்காளிகளிடை அமைச்சர் மதியழகன் சிறப்புரை

சென்னை, அக். 14—

"உணர்ச்சித் துடிப்புடன்கூடிய வாழ்க்கைதான்—வீரத்துடன்கூடிய வாழ்க்கைதான் முழுமையாக இருக்கமுடியும்—சுதந்தரமாக இருக்கமுடியும்—பயனுள்ளதாக இருக்கமுடியும்; அந்த வாழ்க்கைதான், தனி மனித இலட்சியம் ஈடேறவும், ஒரு சமுதாயம் முன்னேறவும் உதவமுடியும்''

என்று, உணவுத் துறை அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், இங்கு நடைபெற்ற விழா ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

...ள்ள வங்கா...ல், அவர் தேசிய... துர்க்கா பூசை விழா, தியாகராய நகரில் உள்ள சங்கக் கட்டிடத்தில் 12—10—67 அன்று கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில், சென்னை நகரில் உள்ள இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட வங்காளிகள் — ஆடவரும் பெண்டிருமாக வந்திருந்தனர்.

இவ்விழாவிற்குச் சிறப்பு விருந்தினராகத் தமிழக உணவு அமைச்சர் மாண்புமிகு கே. ஏ. மதியழகன் அழைக்கப்பட்டிருந்தார்.

சிறப்பு விருந்தினரையும், ஏனையோரையும் திருமதி மோகன் குமாரமங்கலம் வரவேற்றார்.

விழாவில் பாட்டு, நடனம், கும்மி, கோலாட்டம், மற்றும் பலவித கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றிருந்தன.

அமைச்சர் மதியழகன் அவர்கள், தமது சிறப்புரையில் குறிப்பிட்டதாவது:—

"இங்குள்ள வங்காளிகள் சிறுபான்மையினராக இருந்தபோதிலும், செல்வாக்கு மிகுந்தவர்கள்; பல தரத்தவர்கள் வாழும் எங்கள் நகருக்கு நீங்கள் அழகும் இனிமையும் சேர்க்கிறீர்கள்.

யாராயிருந்தாலும் அவர்களுடன் நட்புரிமையுடன் வாழ்வது தமிழகத்தின் வரலாற்றிலும் பண்பாட்டிலும் ஊறிப்போன ஒன்றாகும்.

'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்பது, எங்கள் சங்க இலக்கியத்தின் புறநானூற்றில் கூறப்பட்டிருக்கும் பொன்மொழியாகும்!

தமிழர்களின் சிந்தனைக்கும் செயலுக்கும் தூண்டுகோலாக— பரந்த மனிதாபிமானத்தையும், ஆழ்ந்த அனுதாப உணர்வையும் விளக்கும் வகையில் இது விளங்குகிறது!

வங்காளிகள் மிகவும் உணர்ச்சி வயப்பட்டவர்கள் என்பது பலருடைய எண்ணம்.

நாட்டின் வாழ்வில் ஒவ்வொரு துறையிலும் வங்காளம் ஆற்றியுள்ள மாபெரும் பங்கை நாடு முழுவதும் நன்றியுடன் நினைத்துப் போற்றும்.

வங்கம் உலகினுக்கே தந்த கவி தாகூர்—'தனி மனிதனும் ஒரு நாடும் செயல் தூய்மையின் மூலம்தான் விடுதலை பெற முடியும்' என்று போதித்த விவேகானந்தர்—புரட்சியுள்ளமும் துறவற இயலும் ஒருங்கே பூண்டிருந்த அரவிந்தர்—புயலெனக் கிளம்பி நாட்டிற்கு முதன் முதல் 'ஜெய் ஹிந்த்' வீர முழக்கத்தை வழங்கி, இந்தியா உள்ளளவும் தம்புகழைநிலைநாட்டிய புரட்சி வீரர் சுபாஷ்சந்திர போஸ்—இவர்களெல்லாம் வங்கம் இந்த நாட்டிற்குத் தந்து புகழ் பூத்த மாமணிகளில் ஒரு சிலர்தாம்!

உங்களுடைய கலைத் திறத்தால்— அறிவாற்றலால்—அப்பழுக்கற்ற உணர்ச்சித் துடிப்பால்— தேசிய உத்வேகத்தால், நாடு செழிக்கத் தொடர்ந்து உதவுவீர்கள் என்ற என் நம்பிக்கையை மீண்டும் மீண்டும் தெரிவித்து உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்.''

நடக்க இருப்பவை

17--10--67

குடியேற்றம்

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு கங்கையம்மன் கோயில் அருகில்; தலைவர் : எ. க. துரைசாமி; பேசுவோர் : அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், மா. பா. சாரதி எம்.எல்.ஏ., ஜி. நடராசன் எம்.எல்.ஏ. வி. டி. அண்ணாமலை எம்.எல்.ஏ., எம். பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., பி. செயராமன் எம்.எல்.ஏ., பி. கே. முனுசாமி, செ. மா. அரங்கசாமி, ஏ. வி. துரைசாமி, மு. க. மெய்ஞானம்.

சென்னை 75-வது வட்டம்

தேர்தல் பிரசாரக் கூட்டம்; மாலை 7-மணிக்கு திருவல்லிக்கேணி தேரடித் திடலில்; தலைவர் : கோ. மாணிக்கம்; பேசுவோர் : க. அன்பழகன் எம்.ஏ., எம்.பி., அமைச்சர் மா. முத்துச்சாமி, பெ. சீனிவாசன் எம்.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ., முரசொலி மாறன் எம்.ஏ., வழக்கறிஞர் பட்சிராசகோபாலன், மு. வரதராசன், ஆதிகேசவன்.

18--10--67

சென்னை 46-வது வட்டம்

கலைவாணர் நினைவு மன்றத் துவக்க விழா; இரவு 7-மணிக்கு வரதம்மாள் தோட்டம் பராக்கா ரோட்டில்; தலைவர் : ஜி. நாராயணன்; பேசுவோர் : வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., எம். குமார், க. மாறன் பி.ஏ., கே. வி. பார்த்தசாரதி, பரந்தாமன், க. அச்சுதன், கு. அண்ணாமலை.

கலை நிகழ்ச்சி

சென்னை 27வது வட்டம் தி.மு.க. சார்பில் 17—10—67 இரவு 7-மணிக்கு பெருமாள் கோயில் தோட்டம் 4-வது சந்தில், எம்.ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., திருச்சி சௌந்தரராசன் ஆகியோர் முன்னிலையில்—மு. கசேந்திரன் தலைமையில், முருகுபாண்டியனின் பலகுரல் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

கல்வி அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

நிகழ்ச்சிகள்

அக். 17: பிற்பகல் 3 மணி: பேர்ணாம்பட்டு—ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் வரவேற்பு; மாலை 4-30 மணி: பேர்ணாம்பட்டு பேரூராட்சி மன்ற வரவேற்பு; 5-30 மணி : வளத்தூர், இராசம்பட்டி ஆரம்பப் பள்ளிக் கட்டிடத் திறப்பு; இரவு 7 மணி: குடியேற்றம் நகர் மன்ற வரவேற்பு; 7-30 மணி : குடியேற்றம் பொதுக்கூட்டம்.

சீரணி

தி.மு.க. அமைப்பா?

"சீரணி, தி.மு.க. நடத்தும் ஓர் அமைப்பு அல்ல! தமிழக அரசு நடந்துகின்ற அமைப்பு!

"எந்தக் கட்சி ஆட்சியிலிருந்தாலும், இந்தச் சீரணி அவசியம் தேவை!

"தி.மு.க. அல்லாத கட்சியினர் இதில் சேர்ந்து முன் வரிசையில் நிற்பார்களானால், அதைவிடப் பெருமை எனக்கு வேறு ஒன்றுமில்லை!

"இச்சீரணியில் சேர்ந்திருப்பவர்கள் பெரும்பாலோர், தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர்! இச்சீரணி, கட்சிக்கு அப்பாற்பட்டுத்தான் செயல்படும்!

"திராவிட முன்னேற்றக் கழகம் நினைத்திருந்தால், கட்சிக்காக ஓர் அணியைத் துவக்கியிருக்க இயலும்!"

—அறிஞர் அண்ணா

(செங்கற்பட்டு மாவட்டச் சீரணித் துவக்க விழாவில்)

ஆடு நனைகிறதே--

ஓநாய் அழுகிறது!

மழை வருகிறதே--

மனம் கலங்குகிறார் பக்தவத்சலம்!

"தீ விபத்தில் பாதிக்கப்பட்ட ஏழை மக்கள் வீதியிலே குழந்தை குட்டிகளுடன் பரிதவிக்கின்றனர்; மழை காலம் வேறு வருகிறது; பொதுமக்கள் பொருளுதவி அளித்த போதிலும், ஏழை மக்களின் துயர் நீங்கவில்லையே"

என, ஆயிரம்விளக்கில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசியிருக்கிறார் பக்தவத்சலம்!

சென்னைக் குடிசைப் பகுதிகளில் தீவிபத்துக்கள் நடந்திருப்பது, இந்த ஆண்டு மட்டும்அல்ல—இதற்குமுன் பல ஆண்டுகள் எத்தனையோ முறை நடந்திருக்கின்றன!

ஆனால், கழகம் ஆட்சிக்கு வந்திருப்பது, 1967-ல்தான்! குடிசைகள் எரிந்திருக்கின்றன—இதற்குமுன் பலமுறை; ஆனால், எரியாத வீடுகள் கட்டிக்கொடுக்க முயற்சிகள் துவங்கியிருப்பது இப்போதுதான்!

1967-க்கு முன்னர் தொடர்ந்து காங்கிரசு மட்டும் பதவியில் இருக்கவில்லை; திருவாளர் பக்தவத்சலமும் ஏதாவது ஒரு பதவியில் எப்படியோ ஒட்டிக்கொண்டிருந்தார்!

அப்பொழுதெல்லாம், மழையும் பெய்தது! குடிசைகளும் எரிந்தன!

அன்றெல்லாம்—

குடிசைகள் எரிவதற்குமுன் உள்ளிருந்தே நனைந்தவர்கள், குடிசைகள் எரிந்த பின்னரும் வெளியே வந்து நனைந்தபடியே இருந்தார்கள்!

இப்போதுதான், மழையிலும் நனையாத -- தீயிலும் எரியாத வீடுகள் கட்டப்படுகின்றன -- கழக ஆட்சியில்!

ஆனால் பக்தவத்சலம், 'மழை வருகிறதே' என கண்ணீர் உகுக்கிறார்!

மழை ஏன் வருகிறது தெரியுமா—தென் சென்னையில் தேர்தல் வருகிறதே, அதனால்!

இப்போது தெரிகிறதா – மழை வருவது பற்றி பக்தவத்சலம் ஏன் 'குடை பிடிக்கிறார்' என்று?

★ தென் சென்னைத் தேர்தல் --

★ பருவ மழை --

★ எரியாத -- நனையாத வீடுகள்

மூன்றுக்கும் முடிச்சுப் போடுகிறார் முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம்!

குடிசைவாழ் மக்களுக்கு அளிக்கப் போகும் உதவி—பக்தவத்சலத்தின் மொழியிலேயே சொல்லவேண்டுமென்றால், தென் சென்னைத் தேர்தலை மனதில்கொண்டு உருவாக்கியதல்ல!

பக்தவத்சலம் அவர்களே! தென் சென்னைத் தேர்தலின் போது மட்டும் வருவதல்ல, பருவ மழை! ஆண்டுக்கு ஆண்டு பெய்வது!

திடீர்த் திடீரெனத் தீவிபத்துக்கள் நடைபெறுவது ஒரு தடவை மட்டுமல்ல -- 'தீயவர்'கள் இருக்கும்போதெல்லாம் நடைபெறலாம்!

இரண்டுக்கும் நிரந்தரப் பாதுகாப்பு தருவதற்குத்தான், அண்ணா அமைச்சரவை, எரியாத—நனையாத வீடுகள் கட்டிக் கொடுக்கும் பணியில் இறங்கியிருக்கிறது!

தென் சென்னைத் தேர்தலுக்காகவும் அல்ல! வரப்போகிற மழைகாலம் ஒன்றுக்காக மட்டும் அல்ல!

'வீடுகள் கட்டி முடிக்கப்பட்டவுடன் ... முகத்துடன் பேசுவது' என்ற காரண... பக்தவத்சலம், அதற்குள், 'முடிந்த... பேசுவோமே' என்று பேசுகிறார்!

அது அவருக்கு மனச்சாந்தியைத் தருமென்றால், போகட்டும் -- பாவம்! அனுபவிக்கட்டும்!

—'பாக்சர்'

சென்னைச் சீரணியின் ஆக்கப் பணி

சென்னை, அக். 15—

சென்னை 32-வது வட்டம் வியாசர்பாடி—கல்யாணபுரத்தில் சென்னைச் சீரணியினர் மேற்கொண்டுள்ள வடிகால் வெட்டும் பணியினை, அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்துவும், வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கி. மனோகரனும் நேற்று பார்வையிட்டனர்.

சீரணித் தொண்டர்கட்கு உற்சாகமூட்டும் வகையில் அவர்கள் இருவரும் சிறிதுநேரம் பணியில் ஈடுபட்டனர்.

வட சென்னை சீரணிச் செயலாளர் சு. பாலன் எம்.சி., தொகுதித் தலை...னான டில்லிராஜ், மணிவண்...ன், அன்பிற்கரசன் எம்.சி., திரும... அலமேலு அப்பாதுரை ஆகியோர் அமைச்சரையும்,மனோகரனையும் வரவேற்று, இதுவரை நடந்துள்ள பணிகளை எடுத்து விளக்கினர்.

இன்று 36-வது வட்டத் தோழர்கள் தனியே 200 அடிக் கால்வாய் வெட்டினர்.

மொத்தம் 500 அடி நீளம் கால்வாய் இன்று வெட்டப்பட்டது.

அக். 17-ம் நாள் கல்லூரி மாணவர்--மாணவிகள் கலந்துகொண்டு பணியாற்றவிருக்கின்றனர்.

ஸ்ரீ ஜோதி வேஸ்ட் பேப்பர் கம்பெனி

21, அண்ணாபிள்ளை தெரு, சென்னை-1.

தின, வார, மாத வாசித்த பத்திரிகைகளை நியாய விலைக்கு வாங்கி, மலிவான விலைக்கு விற்பனை செய்கிறோம்.

தமிழக அரசியல் பெறும் நல்ல வடிவம்!

"தென் சென்னை நாடாளுமன்றத்திற்கு நிற்கும் முரசொலி மாறன் அதிர்ஷ்டசாலி; இராஜாஜி ஒரு கையைப் பிடித்து, அன்புடன், 'வாடா தம்பி' என்று அழைத்துச் செல்கிறார்!

"பெரியார், இன்னொரு கையை அன்புடன் பிடித்து, 'இது நம்ப பிள்ளை' என்று அழைத்துச் செல்கிறார்!

"தற்போதைய அரசியலில், பெரியாரும்—இராஜாஜியும் ஒன்றுபட்டது, மாறன் விஷயத்தில்தான்!

"இதுபோல் அரசியல் வாழ்வில் அந்த இரு பெரும் பெரியார்களும் ஒன்றுபடுவார்களானால், 'தமிழ்நாட்டை வெல்லக்கூடிய சக்தி உலகிலேயே இல்லை' எனலாம் அத்தகைய நிலை உருவாக இந்த இடைத் தேர்தலேகூட ஆரம்பமாக இருக்கலாம்!

"'மாறன் நல்ல பிள்ளை ... ஜாக்கிரதையாக வெற்றி பெறச் செய்யுங்கள்' என்று இ... அவர்கள் கூறினர்.

"பெரியாரின் ஆதரவு ...க்குக்கூடக் கிடைக்கவில்லை—மாறனுக்குக் கிடைத்...கிறது!

"குடும்பத்திலேயே அண்ணனுக்குச் செல்லம் இருக்காது; கடைசித் தம்பிக்குத்தான் செல்லம் இருக்கும்! அதுபோல, மாறனுக்குத்தான் பெரியாரின் ஆதரவு கிடைத்துள்ளது!

"'உங்களுடன் சேரவேமாட்டோம்' என்று இதுவரை கூறி வந்த வலதுசாரிக் கம்யூனிஸ்டுகளும்கூட, 'மாறனுக்கே வெற்றி' என்று கூறியிருக்கிறார்கள்!

"தமிழகத்தில் நல்ல அரசியல் வடிவம் பெறுவதைத்தான் இது காட்டுகிறது."

---அறிஞர் அண்ணா

திருக்குறளை ஆராயத் தனித் துறை

மூடப் பழக்கங்களை விடுத்துக் குறள் நெறி வளர்க்க

முதலமைச்சர் அண்ணா வேண்டுகோள்

சென்னை, அக். 15—

"சென்னைப் பல்கலைக் கழகத்தில் திருக்குறள் ஆராய்ச்சிக்கென்றே ஒரு தனித் துறையை ஏற்படுத்தத் தமிழக அரசு முயற்சி செய்யும்" என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் இன்று அறிவித்தார்கள்.

மயிலாப்பூர் இராசேசுவரி மண்டபத்தில் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டில் அண்ணா அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் மேலும் பேசியதாவது :—

"திருக்குறள் இன்று பல்வேறு மொழிகளில் ஆக்கப்பட்டு உலக அரங்கில் உலா வருகிறது. இந்த அளவு வெற்றி, எந்தத் தமிழ் நூலுக்கும் கிடைத்ததில்லை!

திருக்குறள், தரணிக்கெல்லாம் நன்னெறி கூறும் நூல், நாளாக நாளாக—சூழ்நிலை மாற மாற—திருக்குறள், புதிய விளக்கங்களை—விரிவான கருத்துக்களை நமக்குத் தரும் ஆற்றல் வாய்ந்தது! அதன் ஆழ்ந்த பொருளை அறிய ஆராய்ச்சி செய்வது அவசியம்.

வைரத்தைப் பட்டை தீட்டத் ...னுள் பல ...ர்ணங்கள் ...போல், ...ருக்குறளை ... ஆராய அதில் பல ...திய அருமையான கருத்துக்கள் புலப்படும்.

இனித் திருக்குறளைப் பற்றி விரிவுரை ஆற்ற வேண்டிய அவசியம், இல்லை! வள்ளுவர் கூறிய கருத்துக்களை எவ்வாறு பயன்படுத்துவது என்ற ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டியதுதான் தேவை!

திருக்குறள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் எழுதப்பட்டது. அந்தக் காலத்தில் வேறு நாடுகளில் இயற்றப்பட்ட எந்த நூலிலும், குறளில் உள்ளதைப் போன்ற கருத்துக்கள் காணப்படவில்லை!

பிற நாடுகளில் மக்கள் காட்டுமிராண்டிகளாக இருந்த அந்தக் காலத்திலேயே தமிழர்கள் நல்ல பண்பாடு மிகுந்தவர்களாகத் திகழ்ந்தனர் என்பதைத்தான் திருக்குறள் காட்டுகிறது!

திருக்குறளைப் பற்றிப் பெருமையாகப் பேசும் நம்மிடம் மூடப் பழக்க வழக்கங்கள் இருப்பதைப் பார்க்கும் வெளிநாட்டவர், நம்மைப் பற்றி ஐயப்படுவார்கள்! அதனால்தான், திருக்குறளுக்கு உலகில் கிடைக்க வேண்டிய அளவு பெருமை கிடைக்கவில்லை!

பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் என்ற குறளையும் போற்றிக்கொண்டு, சாதி முறைகளையும் கைவிடாமல் இருப்பது பொருத்தமாக இருக்காது! குறளை நாம் போற்றுவதாக ஆகாது!"

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும். அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, ஸ்ரீநிவாச ... செட்டித் தெரு, சென்னை ...) ...